1982 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மாவட்ட உலாத்தலமாக்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது அதிலே முதலிலே பூண்டி நீர்த் தேக்கத்தை எடுப்பதாக இருக்கின்றது. அதற்குப் பிறகு பழவேற்காடு என்ற ஒரு புகழ்பெற்ற, வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த ஊரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை இரண்டும் முடிந்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற அந்த நீர்வீழ்ச்சி பகுதியைப்பற்றிப் பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்-

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, திருத்தணியும், பூண்டியும் சுற்றுலா மையமாக அறிவிக்கப்படும் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே போன்று, என்னுடைய தொகுதியான பழனி ஒரு நல்ல தலம்; சுற்றுலாத் தலமாக வளர்ந்து வரக்கூடியதாக இருப்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். அந்தக் கோயிலின் வருமானம் கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாயாக வருகிறது. பக்கத்தில் இரண்டு அணைக்கட்டுகளும் இருக்கின்றன. கொடைக்கானல் என்ற மலைவாசஸ்தலம் பக்கத்தில் இருக்கிறது. ஆகவே, அந்தப் பழனியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முயற்சியெடுக்குமா என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்புகின்ற கேள்வி மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லை என்றாலும், பழனி என்கிற அந்தப் பகுதி இப்பொழுது இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற நகரமாக விளங்கி வருகிறது. எந்த நகரத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்கின்ற திட்டம் எதுவுமில்லை. அப்படி அறிவித்து சுற்றுலாத் தலமாக மாற்ற முடியாது. பயணிகள் சென்று பயனடையும் வகையில் சில வசதிகளைச் செய்து தருவதற்காகத்தான் சுற்றுலாத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படுகிறது. ஆகவே, இப்பொழுதே இலட்சக்கணக்கான மக்கள் பக்தர்களாகப் பழனியிலே வந்து கூடுவதால் அதைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து சுற்றுலாப் பயணிகள் வருகின்ற நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று அவசியமில்லை.

அமரர் ஜீவாவுக்கு நாகர்கோவிலில் சிலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 68—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவிலில் அமரர் ஜீவாவுக்குச் சிலை வைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம்.

[1982 பிப்ரவரி 6

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர வர்களே, அமரர் ஜீவாவின் சிலைக்கு அடியில் அவரது சமதர்மக் கருத்தான "காலுக்குச் செருப்பும் இல்லை, கால் வயிற்றுக் கூழும் இல்லை, பாழுக்கு உழைத்தோமடா" என்ற பாடல் வரிகள் பொறிக்கப்படுமா? அமரர் ஜீவாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது குடும்பத்தாருக்கு அரசு ஏதேனும் உதவி செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மூலக்கேள்வி சிலை வைப்பதைப்பற்றியது. குடும்பத்திற்கு உதவுவதுபற்றித் தனிக்கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரவர்கள் அதற்குப் பதில் அளிக்க இயலும். சிலையின் கீழே என்ன வாசகம் பொறிக் கப்பட வேண்டும் என்பதைப்பற்றி அந்தச் சிலை நிறுவப்படும் பொழுது முடிவெடுத்து பொறிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவரவர் களே, சமதர்மப் பூங்காவில் தமிழகக் கவிஞராக உலாவிய அமரர் ஜீவா சிலை திறப்பு, குமரி மாவட்டத்தைத் தமிழகத்துடன் இணைக்கப் போராடிய தியாகி நேசமணி பெயரில் போக்குவரத்துக் கழகம், குமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைந்த வெள்ளி விழா ஆகிய மூன்றையும் சேர்த்து முப்பெரும் விழா நடத்தப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கனவே எடுத்திருக்கின்ற முடிவை மாண்புமிகு உறுப்பினரவர்கள் எப்படியோ தெரிந்து கொண்டு இங்கே வினாவாக எழுப்பியிருக்கிறார்கள். மறைந்த தலைவர் தோழர் ஜீவா அவர்களின் உருவச்சிலையைத் திறக்க மாண்புமிகு முதல்வரவர்களிடத்தில் தேதி கேட்கப்பட்டி ருக்கிறது. அதையொட்டி மறைந்த வீரர் நேசமணி அவர் களின் பெயரால் உருவாகியிருக்கின்ற போக்குவரத்துக் கழகத்தின் துவக்க விழாவையும், தமிழ் மாநிலம் அமைந்த வெள்ளி விழாவையும் ஒன்றாக இணைத்து மூன்று பெரும் விழாக்களாகக் கன்னியாகுமரி மாவட்டத்திலே நடத்த வேண்டுமென்பது அரசினுடைய திட்டம். அதற்கான முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் பரவலாகவுள்ள வெற்றிலைக் கொடிக்கால் வாடல் நோய்.

*வினா எண் 69—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் 7 ஆண்டுகளாகக் கொடிக்கால் வாடல்நோய் காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயி கள் பாதிக்கப்பட்டுள்ளதுபற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த விவசாயிகளுக்கு அரசு உதவித் தொகை அளிக்க உத்தேசித்துள்ளதா?